# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● செப்டம்பர் 4, 2021 Weekly E-paper ● September 4, 2021





## இந்து விரோத ஆட்சி

நேர்காணல்: பேராசிரியர் அருணன்

## கொரோனாவா? விநாயகரா?

தலையங்கம்

## பேரவையின் 13ஆம் பொதுக்குழு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● செப்டம்பர் 4, 2021 Weekly E-paper ● September 4, 2021


# தூங்குவதைப் போன்று பாசாங்கு

● பேராசிரியர் கருணாநந்தன்




தமிழ்க் களஞ்சியமா திராவிடக் களஞ்சியமா என்கிற வாதங்களுக்குப் பின்புலமாக இருப்பது "திராவிடம்" என்கிற கருத்தியல் மீது, பண்பாட்டு அடையாளத்தின் மீதுள்ள காழ்ப்பே என்பது வெளிப்படை.

தமிழ் மொழி, தமிழ் மக்கள்,ஆகிய கருத்தியல்களுக்கும், அடையாளங்களுக்கும் திராவிடம் என்பது முரணானது என்கிற கருத்துப் பிழையை பரவலாக்கும் உள்நோக்கம் கொண்டவை.



பேராசிரியர் கருணாநந்தன்

திராவிடமும் தமிழும் ஒன்றே எனில் தமிழ் என்றே கூறலாம்; திராவிடம் என்பதைத் தவிர்க்கலாமே என்கிற வாதம் மேற்போக்காகப் பார்க்கும்போது சரியாகப் படலாம். தமிழ் முழுக்க முழுக்க மொழி சார்ந்தது. திராவிடம் மொழியோடு, சமூகப் பண்பாட்டு விழுமியங்களை உள்ளடக்கியது.

ஆரியப் பார்ப்பனீய விழுமியங்களுக்கும், பண்பாட்டு அடிப்படைகளுக்கும், மரபுகளுக்கும், தத்துவங்களுக்கும் மாறானது. கடந்த அய்யாயிரம் ஆண்டுகளாக ஆரிய(பார்ப்பனீய)மல்லாத, பார்ப்பனீயத்திற்கு இணங்கமறுக்கிறச் சமூகங்களின் பொதுஅடையாளமாக "திராவிடம்" எனபதை ஆரிய இலக்கிய மரபுகளே ஏற்றுக் கொண்டுள்ளன.

> “
> மொழி மட்டுமன்றி, இனக்கூறுகள், பண்பாட்டு மரபுகள்,தத்துவ நிலைகள்,சமூகக் கண்ணோட்டங்கள் போன்ற பல நிலைகளிலும் பொதுத் தன்மை கொண்டது திராவிட அடையாளம். இந்த திராவிடத்தில் தமிழின் தொன்மை, தமிழின் முதன்மையை மறுப்பார் இல்லை

ஆரியம் பல மொழிப் பிரிவுகளைக் கொண்டிருப்பதைப் போன்று திராவிடமும் பலமொழிகளைக்கொண்டு உள்ள ஒரு பெரும் நாகரீக மரபாகும். வெண்கலக் காலத்துச் சிந்துவெளி நாகரீகமும் திராவிட நாகரீகமென்பதை இந்த அடிப்படையில்தான் உலக வரலாற்றாளர்கள் அடையாளப் படுத்தியுள்ளனர்.

மொழி மட்டுமன்றி, இனக்கூறுகள், பண்பாட்டு மரபுகள், தத்துவ நிலைகள், சமூகக் கண்ணோட்டங்கள் போன்ற பல நிலைகளிலும் பொதுத் தன்மை கொண்டது திராவிட அடையாளம். இந்தத் திராவிடத்தில் தமிழின் தொன்மை, தமிழின் முதன்மையை மறுப்பார் இல்லை.

தமிழில் பார்ப்பனீயத் தவிர்ப்பு என்பதை, சமத்துவ விழுமியங்களை உறுதி செய்வது என்பதற்கான அடையாளமாகத் திராவிடம் கையாளப்படுகிறது. மொழி மட்டுமல்ல, மொழி கடந்த நிலையிலும் ஒரு நியாயமான, அநீதிகளுடன் சமரசம் செய்துகொள்ளாத, இணங்கிப் போகாத உறுதியான நிலைப்பாட்டினை வலியுறுத்தும் கருத்தியலாக திராவிடம் கையாளப்படுகிறது.

மொழியுடன் நியாயமான சமூக நோக்கங்களையும் உள்ளடக்குவதாகவே திராவிடக்களஞ்சியம் பொருள்படும்.

உலகளாவிய நிலையில், ‘தமிழ் முதன்மை பெறும் திராவிடம்’ என்பதற்குக் குறைந்தது ஆறாயிரம் ஆண்டுத் தொன்மை உண்டு. திராவிட மறுப்பை முதன்மைப்படுத்துபவர்கள், இந்தியாவின் முதல் நாகரிகமும், ஒரே நாகரீகமும் (சமஸ்கிருத)வேத நாகரீகமே என்கிறவர்களுக்கு வலுச் சேர்ப்பவர்களாக அமைந்துவிடுவர்.

அறியாமலா இதைச் செய்கின்றனர்? தூங்குவதைப் போன்று பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியுமா? ●

# இந்து விரோத ஆட்சி

## நேர்காணல்: பேராசிரியர் அருணன்

**தேசியப் பணமயமாக்கல் என்று பொதுச்சொத்துகளைக் குத்தகைக்குவிடும் ஒன்றிய அரசின் அறிவிப்பு பற்றிய தங்களுடையக் கருத்து...**



பேராசிரியர் அருணன்

இப்போது இருக்கக்கூடிய மோடி தலைமையிலான பாஜக அரசு இதற்கு முந்தைய ஒன்றிய அரசுகளின் பொருளாதாரச் செயல்பாடுகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. காங்கிரஸ் கட்சியினுடைய அதே பொருளாதாரக் கொள்கையைத்தான் பாஜக பின்பற்றுகிறது என்று தொடர்ந்து பாஜகவினர் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அது அப்படி அல்ல. நாங்கள் கம்யூனிஸ்டுகள், காங்கிரசினுடையப் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்தோம். ஆனால் அதைவிட இது மோசமானதாக இருக்கிறது. ஏனென்றால் காங்கிரஸ் தனியார்த் துறையை வளர்த்தது, ஆனால் பொதுத்துறையை முற்றிலுமாக ஒழிக்கவில்லை. குறிப்பாக நேரு காலத்தில் அவர் பொதுத்துறைகளை உருவாக்கினார். நாட்டினுடைய நவீனத் திருக்கோவில்கள் பொதுத்துறைதான் என்று சொன்னார். இந்திராகாந்தி காலத்திலேயே கூட வங்கிகளை நாட்டுடைமை ஆக்கினார்கள். நரசிம்மராவ் காலத்தில் இருந்துதான் அவர்கள் மாறுபட்டார்கள். ஆனால் அவருடைய காலத்தில் கூட பொதுத்துறைச் சொத்துகளை எல்லாம் விற்பது என்ற நிலைப்பாட்டை எடுக்கவில்லை. அல்லது பொதுத்துறை இருக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. ஆனால் பாஜகவின் நிலைப்பாடு பொதுத்துறை இருக்கக்கூடாது என்பது. எப்படி ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே பண்பாடு என்று சொல்கிறார்களோ அதேபோல பொருளாதாரத்தில் ஒரே துறை தனியார்த்துறை என்று ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

இந்தக் கொள்கை எங்கிருந்து வருகிறது என்றால் இவர்களுடைய குருபீடம் ஆகிய ஆர்.எஸ்.எஸ் லிருந்து வருகிறது. சென்ற வாரம் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத், “அரசு என்பது தொழிலை ஒழுங்கமைக்கும் ரெகுலேட்டராக மட்டுமே இருக்க வேண்டுமே ஒழிய தொழிலை நடத்தக் கூடாது. இதுதான் எங்களுடையக் கோட்பாடு.” என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். பாஜக செய்தித் தொடர்பாளர்கள் சிலர் தெளிவாகவே எங்களுடையக் கோட்பாடு பொதுத்துறை கூடாது, அரசாங்கம் தொழில் நடத்தக் கூடாது என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

இப்படி ஒரு கொள்கை இருக்கிறவர்கள் என்ன செய்வார்கள்? பொதுத்துறையை எல்லாம் விற்று விடுவார்கள். பொதுத்துறையை விற்பதில் இரண்டு வகை இருக்கிறது. ஒன்று ஏற்கனவே லிமிடெட் கம்பெனியாக இருந்தால் பங்குகள் இருக்கும். பொதுத்துறை என்றால் அந்தப் பங்குகள் அரசாங்கத்திடம் இருக்கும். அந்தப் பங்குகளை விற்க ஆரம்பித்தார்கள். காங்கிரஸ் ஆரம்பித்தது. அதை இவர்கள் கொஞ்சம் தீவிரமாகச் செய்துப் பார்த்தார்கள்.






அது என்ன என்றால் பெரும்பான்மைப் பங்குகளை வைத்துக்கொண்டு குறைந்தபட்சப் பங்குகளை பெருமுதலாளிகளுக்குக் கொடுத்தார்கள். கேட்டபோது எங்களிடம்தானே அதிகரம் இருக்கப்போகிறது, போர்ட் ஆப் டைரக்டர்ஸ் சொல்வதுதான் முடிவாகும். ஆனால் நடைமுறையில் வேறு மாதிரி ஆகும். ஆனாலும் அரசுக்கு ஒரு பிடிமானம் இருக்கும். இவர்கள் இன்னும் தீவிரமாக, 51சதவீதப் பங்குகள் கூட அரசிடம் வைத்திருப்பதில்லை 100 சதவிகிதமாக விற்பது என்கிற வழியில் போனார்கள். அப்படி விற்ற போதும் சில பொதுத்துறை நிறுவனங்களை விற்க முடியவில்லை.

இப்போது என்ன செய்கிறார்கள் என்றால் இந்த இரண்டாவது மாடல் நாங்கள் பொதுத்துறைச் சொத்துகளை விற்கவில்லை, குத்தகைக்குத்தான் விடுகிறோம் என்று சொல்கிறார்கள். இந்த முடிவுக்கு ஏன் வந்தார்கள் என்று யோசிக்க வேண்டியுள்ளது. பெருமுதலாளிகள் எல்லாம் முதலில் பங்குகளை வாங்கி பிறகு டைரக்டர்ஸ் ஆனதற்குப் பிறகு பொதுத்துறைச் சொத்துகளையெல்லாம் ஆள்வது என்பது ரொம்பவும் சுத்திவளைப்பது போன்ற மாதிரி இருக்கிறது. அதனால் அவர்களுக்கு அனைத்துச் சொத்துகளையும் கொடுத்து விடுவது. மிகமுக்கியமாக நிலங்கள், இடங்கள், பெரிய பெரியக் கட்டிடங்கள் ஆகியவற்றைக் குத்தகைக்கு என்று கொடுத்துவிடுவது. ஆண்டுக்கு 1.5 இலட்சம் கோடி ரூபாய் என்று நான்கு ஆண்டுகளில் ஆறு லட்சம் கோடி ரூபாய் முடிவு செய்திருக்கிறார்கள்.

**குத்தகைக்குவிடப்படும் பொதுச்சொத்துகளைக் குத்தகைக் காலம் முடிந்தவுடன் அரசு மீட்டுக்கொள்வதில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள்.**

நிலம் குத்தகைக்கு விடுவது என்பது சொத்துகளை விற்பதை விட ஆபத்தானது. முதலில் 40 ஆண்டுகள் குத்தகை என்று இருந்தது, தற்போது 25 ஆண்டுகள் என்று சொல்கிறார்கள். அரசுச் சொத்துகளை அத்தனை ஆண்டுகள் குத்தகைக்குக் கொடுக்கும்பது சம்பந்தப்பட்ட அரசு நிலங்களுக்குள் அரசு நுழைய முடியாது. நடைமுறையில் இது தனியாருக்குத்தான் சொந்தமாகும். நீண்ட காலம் குத்தகைக்கு விட்டதை அரசாங்கம் திரும்பப் பெற்றதாக வரலாறு கிடையாது. அதிலும் இவர்கள் அதானி, அம்பானி, டாடா, பிர்லா போன்ற சில பெருமுதலாளிகளுக்காக இதைச் செய்கிறார்கள். அவர்களிடம் இருந்து மீட்டு எடுப்பார்களா? விமான நிலையங்கள், துறைமுகங்கள் போன்றவற்றை அதானிக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பெட்ரோலிய நிறுவனங்களை அம்பானிக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் யார் யாருக்கு என்ன என்று ஏற்கனவே பேசி வைத்திருப்பார்கள் போலிருக்கிறது. அரசுச் சொத்துகள் அதாவது பொதுமக்களுடையச் சொத்துகளைத் தனியார் பெருமுதலாளிகளிடம் ஒப்படைக்கிறார்கள். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் திருப்பித் தருவார்களா? குத்தகையை நீட்டிக்கச் சொல்வார்கள். அரசு நீட்டிக்கவில்லை என்றால் வழக்குத் தொடுப்பார்கள். அது பல ஆண்டுகள் இழுத்துக்கொண்டே போகும். பிறகு சலித்துப் போய் அரசாங்கம் அவர்களிடமே கொடுத்து விடும். பொதுச் சொத்துகளை நாங்கள் விற்கவில்லை குத்தகைக்குத்தான் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். கடைசியில் என்னவென்றால் அந்த குத்தகைப் பணத்துக்கே விற்று வடுவார்கள்.

**பொதுச்சொத்துகளைப் பெருமுதலாளிகளிடம் கொடுக்கும்போது மக்களுக்கு என்ன விளைவுகள் ஏற்படும்?**

இப்படிக் கொடுக்கும் போது அது சாதாரண மக்களுக்குப் பெரியக் கேடாக விளையும். அனைத்துக் கட்டணங்களும் உயர்ந்துவிடும். அதைவிட முக்கியம் சேவைத்துறை எல்லாம் தனியாரிடம் சென்றுவிட்டால் பொதுமக்களுக்குப்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## முன்பக்கத் தொடர்ச்சி...

பயன்படுமா? அவர்கள் வைத்ததுதான் விலை. கொரோனா காலத்தில் ஏர் இந்தியாதானே உதவியது. சேவைத்துறை தனியாருக்குப் போனால் பொதுமக்களுக்கு ஆத்திர அவசரத்திற்கு உதவாது. கடைசியில் காசுள்ளவனக்குத்தான் சேவைத்துறை. காசில்லாதவன் எதற்கு இரயிலில் விமானத்தில் செல்ல வேண்டும் என்கிற நிலை ஏற்படும்.

இந்தியாவில் பொது மக்களில் 80 சதவீதம் பேர் இந்துக்கள்தான். அவர்கள் கூற்றுப்படி தங்களை இந்துக்களுக்கான கட்சி என்று சொல்கிறார்கள். பெட்ரோல், டீசல் விலை எவ்வளவு உயர்ந்திருக்கிறது. இன்று சமையல் எரிவாயு மேலும் 25 ரூபாய் உயர்ந்து இருக்கிறது. அடுத்த மாதம் ஆயிரம் ரூபாயாக உயர்த்தி விடுவார்கள். இப்படி, சுமைகளைப் பொதுமக்களுக்குத்தான் தருகிறார்கள். பொதுமக்கள் என்றால் இங்கு பெரும்பானமை இந்துக்கள்தானே. ஏழை இந்துக்களின் தலையில்தான் சுமையை வைத்திருக்கிறார்கள். தனியார்மயம் என்று கூட சொல்ல முடியாது. இது ஏகபோகமயமாக்கல். குறிப்பிட்ட 6-7 பெருமுதலாளிகளிடம் அனைத்தையும் கொடுப்பது 'privatisation' அல்ல 'monopolisation' ஆகும். இனி அவர்கள் வைப்பதுதான் பொருளாதாரம். அன்று இந்திரா காந்தி அம்மையார் வங்கிகளைத் தேசியமயமாக்கிய போது அதை எதிர்த்த ஒரே கட்சி ஜனசங்கம்தான். அதுதான் இன்றைய பாஜக. இப்போது அரசு வங்கிகளை தனியார் வங்கிகளாக மாற்றுகிறார்கள். ஆக இது இட ஒதுக்கீடு சமூகநீதி போன்றவற்றில் மற்றும் இந்து விரோத ஆட்சி அல்ல பொருளாதார அடிப்படையிலும் இது இந்து விரோத ஆட்சி தான். இது முஸ்லிம் விரோத, கிறிஸ்தவ விரோத ஆட்சி மட்டுமல்ல இந்து விரோத ஆட்சி ஆகும்.

**நேர்கண்டவர்: மா.உதயகுமார்**

இரண்டாம் ஆண்டில்
திராவிடப்பள்ளி
நிறுவனர்:
சுப. வீரபாண்டியன்
திராவிடப்பள்ளி
மாணவர் சேர்க்கை
நீட்டிக்கப்படுகிறது
www.dravidapalli.com
விண்ணப்பிக்க கடைசி நாள்
15.09.2021
தலைமை ஒருங்கிணைப்பாளர்
மா. உமாபதி
தொடர்புக்கு : 99941 13558

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## “கொரோனாவா? விநாயகரா?”

கொரோனாத் தொற்று இரண்டு அலைகளாக வந்து நாட்டைப் புரட்டிப் போட்ட நிலையில் மூன்றாம் அலை அச்சத்தில் மக்கள் இருக்கிறார்கள்.

கொரோனாத் தொற்றைத் தடுக்கும் வழிகளில் தனி மனித இடைவெளி என்பது மிக முக்கியம். வடநாட்டுக் கும்பமேளாவைத் தடை செய்யாதக் காரணத்தால், கொரோனாக் கொடுந்தொற்று எப்படித் தலைவிரித்து ஆடியது என்பதை உத்தரப் பிரதேசத்தில் பார்த்தோம். இறந்து போன உடல்களைக் கூட எரிக்க முடியாத நிலையில் சாலையோரங்களில் அவைகளைக் கண்டோம்.

அண்டைய கேரளா, ஓணம் பண்டிகையை முன்னிட்டு தடையைத் தளர்த்தியதால் இன்று கேரளத்தில் கொரோனாத் தொற்று வேகமெடுத்துள்ளது. அது போலத்தான் மும்பை நிலையும் இருக்கிறது.

பா.ஜ.க ஆளும் கர்நாடகத்தில் அரசு விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்திற்குத் தடை விதித்துள்ளது. பாஜகவின் முந்தைய கூட்டாளியான சிவசேனா ஆட்சி, மும்பையில் விநாயகர் சதுர்த்திக்குத் தடை விதித்துள்ளது.

இவையெல்லாம் தெரிந்திருந்தும் பா.ஜ.க வின் தமிழகத் தலைவர் அண்ணாமலை, தமிழ்நாடு அரசு விநாயகர் சிலை ஊர்வலத்திற்குத் தடை விதிக்கக் கூடாது என்று பேட்டி அளிக்கிறார். அவருக்கு இதில் ஒரு காழ்ப்புணர்ச்சி இருக்கிறது என்பது வெளிப்படை.

தி.மு.கழகம் ஆட்சியேற்ற போது தமிழ்நாட்டில் கொரோனா உச்சத்தில் இருந்ததை மறக்க முடியாது.

தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் நிதானமாக ஆனால் போர்க்கால அடிப்படையில் எடுத்த நடவடிக்கையால் தடுப்பூசி, ஆக்சிஜன் பற்றாக்குறைகள் எல்லாம் சமாளித்து 100 நாட்களுக்குள் நிலையையைக் கட்டுக்குள் கொண்டு வந்தார். இதில் மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களின் பணியும் கடுமையாக இருந்துள்ளது.

அமைதியாக இருக்கும் தமிழ்நாட்டில், சூழலைப் புரிந்து கொள்ளாமல் கலவரம் ஏற்படும் வாய்ப்புள்ள விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தைப் பொதுவெளியில் நடத்த அரசு அனுமதிக்க வேண்டும் என்ற சங்பரிவாரங்களில் கூற்று மிகவும் ஆபத்தானது.

தமிழ்நாடு அரசு, வீட்டில் சதுர்த்தியைக் கொண்டாடத் தடைவிதிக்கவில்லை. பொதுவெளியில் குறிப்பாகக் கூட்டமாக மக்கள் செல்லும் ஊர்வலங்களைத்தான் தடைசெய்துள்ளது.

கொரோனாப் பரவலைத் தடுக்கப் பெரிதும் உதவும் இந்தத் தடை வரவேற்புக்கு உரியது, மக்களைப் பாதுகாக்கும் வழியும் இதுதான்.

இந்த உண்மை வடிவம் சங்கப் பரிவாரங்களுக்குக் குறிப்பாக அண்ணாமலைக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் விநாயகர் சதுர்த்திக்குத் தடை நீக்கக் கோருவது, தி.மு.கழக அரசின் மீது அவர்களுக்கு இருக்கும் காழ்ப்புணர்ச்சி மட்டுமன்று, மக்களின் மீது அவர்களுக்கு அக்கரையில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# பேரவையின் 13ஆம் பொதுக்குழு

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநிலப் பொதுக்குழு கடந்த 29.08.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று திருச்சியில் சரியாக 10 மணிக்குத் தொடங்கியது.

பேரவையின் அவைத்துணைத் தலைவர் தோழர் பொள்ளாச்சி மா.உமாபதி தலைமை ஏற்றார்.

துணைப் பொதுச்செயலாளர் தோழர் சிற்பி.செல்வராசு வரவேற்பு உரையாற்றினார்.

பேரவைத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் சிங்கராயர் முன்னிலையில் நடைபெற்ற இப்பொதுக்குழுவில் பொதுச்செயலாளர் தோழர் சுப. வீரபாண்டியன் தொடக்கவுரையாற்றினார்.

“கருஞ்சட்டைத்தமிழர்” மின்னிதழ் குறித்துத் தோழர் உதயகுமார், “திராவிடம் 100” குறித்துத் தோழர் மணிகண்டன்,”திராவிடப்பள்ளி “ குறித்துத் தோழர் மா.உமாபதி “கருஞ்சட்டைப் பதிப்பகம்” குறித்துத் தோழர் ‘பெல்’.ராஜன், “கல்விக்குழு” குறித்துத் தோழர் லாரன்ஸ் “நிதிக்குழு’’ குறித்துத் தோழர் செல்வின் உள்ளிடப் பேரவையின் அணி பெறுப்பாளர்கள், எதிர்காலத் திட்டம் குறித்து அறிக்கைகள் வெளியிட்டனர். அதுபோல

சார்பு அணிகளின் பொறுப்பாளர்கள், மாவட்டச் செயலளர்கள் தமது அறிக்கைகளை வாசித்தார்கள்.

பேரவையின் அமைப்புச்செயலாளர் தோழர் புலேந்திரன் புதிதாகப் பேரவையில் இணைந்த தோழர்களை அறிமுகம் செய்து உரையாற்றினார்.

பேரவையின் கொள்கை பரப்புச் செயலாளர்கள் தோழர்கள் வேடச்சந்தூர் ரவி, இரா.உமா ஆகியோர் உரையாற்றினர்.

தலைமை நிலையச் செயலாளர் தோழர் எட்வின் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

பேரவையில் இணைந்த தோழர் தேன்மொழி, பேரவையின் மறுபதிப்பான கொள்கை அறிக்கையை வெளியிட, அதனைத் தோழர் அகிலா பெற்றுக் கொண்டார்.

மதிய உணவுக்குப் பின் தோழர்களின் உரையையடுத்துப் பேரவைப் பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின் நிறைவுரையுடன் பொதுக்குழு நிறைவு பெற்றது, தோழர் எட்வின் நன்றி கூறியதையடுத்து, சரியாக 4 மணிக்கு.

நிகழ்ச்சியைத் தோழர் கார்த்திக் திருச்சி மாவட்டப் பேரவைத் தோழர்களுடன் இணைந்து சிறப்பாகச் செய்திருந்தார்.








## தீர்மானங்கள்

**தீர்மானம் 1.** மதுரை மாவட்டத்தின் பேரவைத் தென்மணடலச் செயலாளராகப் பணியாற்றிய தோழர் ஜெயம்பெருமாள், திருப்பூர் மாவட்ட அவைத் தலைவர் தோழர் உடுமலைத் தண்டபானி ஆகியோர் மறைவுக்குப் இப்பொதுக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது.

**தீர்மானம்:2** கொரோனாக் கொடுந்தொற்று உலகையே ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் நேரத்தில், தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுச் செயற்கரிய செயல்களை நாட்டு மக்களுக்குச் செய்து கொண்டு இருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இப்பொதுக்குழு மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறது.

**தீர்மானம் 3** பேரவையின் வலையொலி, பதிப்பக வெளியீடுகள் அனைத்தையும் மக்கள் மத்தியில் வேகமாகக் கொண்டு சேர்ப்பது என தீர்மானிக்கிறது, இப்பொதுக்குழு.

**தீர்மானம் 4** திரா விடப்பள்ளியின் மாணவர் சேர்க்கைக்குத் தனது சமூக வலைத்தளத்தில் செய்தி வெளியிட்டு, மாணவர்களைச் சேர ஒத்துழைப்பு நல்கிய தி.மு.கழக இளைஞரணிச் செயலாளரும், சட்ட மன்ற உறுப்பினருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்குப் பொதுக்குழு நன்றி தெரிவிக்கிறது.

**தீர்மானம் 5** தொடர்ந்து மக்கள் விரோதப்பணிகளில் செயல்பட்டு வரும் மதவாத ஒன்றிய அரசு, நாட்டின் அரசுச் சொத்துகளைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் பிரதமர் நரேந்திர மோடி அரசை இப்பொதுக்குழு மிகவன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் 6** சமூக நீதிக் கொள்கையில் தொடந்து இயங்கும் திராவிட இயக்கத் தமிழர் பேரவைக்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கட்ட, உரிய நிதியைத் திரட்ட இப்பொதுக்குழுத் தீர்மானிக்கிறது

–தோழர் சிற்பி.செல்வராசு

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian